பாடம் **10** **பெப்ரவரி 28-மார்ச் 6**



# கிறிஸ்துவுக்குள் பரிபூரணமுள்ளவர்கள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** 1கொலோ 2; எபி 7:11; ஏசா 61:3; 1 கொரி 3:6; உபா 31:24–26; ரோமர் 2:28, 29; 7:7.

**மனன வசனம்:** ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது. கொலோசெயர் 2:16,17.

நீங்கள் ஏன் ஓய்வுநாளை ஆசரிக்கிறீர்கள் என்று யாராவது உங்களிடம் கேட்டிருக்கிறார்களா? ஏன் இன்றைய வசனத்தையும்கூட ஒரு 'மோசமான எதிர் வாதமாக' அவர்கள் பயன்படுத்தியிருக்கலாம். ஆனாலும், நான்காம் கற்பனை சம்பந்தமாக இந்த வசனம் எழுதப்படவில்லை. மாறாக சபையிலிருந்த சில கள்ளப் போதகர்கள் கற்பித்த தவறுகளுக்கு பிரதிவினையாக எழுதப்பட்டது. அந்தத் தவறுகள் என்ன?

முதலாவது, அந்தக் கள்ளப்போதனை 'லௌகீக ஞானம்', 'மனுஷர்களின் பாரம்பரியம்', 'உலகவழிபாடுகள்', 'கிறிஸ்துவைப் பற்றினதல்ல' என்று அழைக்கப்படுகிறது. கொலோ 2:8.

அதில் விருத்தசேதனம்பண்ணுவதும், யூதப்பண்டிகைகளை ஆசரிப்பதும் அடங்கும். கொலோ 2:11,16. மேலும், யூதச் சுத்திகரிப்பு சடங்குகளும், உணவுடன் சம்பந்தப்பட்ட சட்டத்திட்டங்களும் அடங்கும். கொலோ 2:16,21. தேவதூதர்களுக்கு ஆராதனைசெய்கிற முயற்சியாக தூதர்களைத் தொழுவதும், தூதர்களோடு தொழுவதும் அடங்கும். கொலோ 2:19.

இறுதியாக, அது 'மனுஷருடைய கற்பனைகளையும் போதனைகளையும்' அடிப்படையாகக் கொண்டது; சந்நியாச நடவடிக்கைகளும் அதில் அடங்கும். கொலோ 2:22,23. இந்தக் கள்ளப்போதகர்கள் பக்திகாட்டிய போதிலும்கூட சுவிசேஷம்பற்றி தவறாகப் புரிந்திருந்தார்கள். ஏனென்று இந்த வாரம் பார்ப்போம். ஏழாம் நாளை ஓய்வுநாளாகக் கைக்கொள்வதுபற்றி மனன வசனம் பேசவில்லை என்பதையும் பார்ப்போம்.

*2026, மார்ச் 7 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# தேவனுடைய ஞானம், அறிவு

'ஞானம் கண்டெடுக்கப்படுவது எங்கே? புத்தி விளைகிற இடம் எது?' என்று யோபு கேட்டார். யோபு 28:12. கிறிஸ்துவில் என்று பதிலளிக்கிறார் பவுல்: 'அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கி யிருக்கிறது.' கொலோ 2:3; 1கொரி 1:30. நம்மிடம் கிறிஸ்து இருந்தால், சகலத் தையும் பெற்றிருப்போம். வாழ்க்கையின் நோக்கத்தை 'அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தையும்' பெற்றிருப்போம். கொலோ 2:2. இரட்சிப்பின் முழுத்திட்டத்தையும் உள்ளடக்கிய தேவனுடைய இரகசியமானது கிறிஸ்து மூலமாய் வெளியாக்கப்பட்டது.

**கொலோசெயர் நிருபத்தை பவுல் எழுதியதின் நோக்கம் என்ன? கொலோ 2:1-7.**

'தேற்றப்படுதல்' என்றால், 'பெலப்படுத்தப்படுதல்'. கொலோ 2:2. கொலோ செய விசுவாசிகள் கள்ளப்போதனைகளை உணர்ந்துகொள்வது மட்டுமல்ல, மாறாக கிறிஸ்தவ அன்பில் அவர்கள் 'இணைக்கப்பட' வேண்டும் என்பதே பவுலின் ஆசை. 'தேற்றப்படுதல்', 'இணைக்கப்படுதல்' என்பதற்கு கடந்தகால வினைச்சொற்களை பவுல் பயன்படுத்துகிறார்; எனவே, இந்த நிருபத்தை தான் எழுதின நோக்கம் நிறைவேறும் என்று பவுல் நம்பிக்கையோடு இருந்தது தெரி கிறது.

ஆனாலும் அவர்களது 'ஒழுங்கையும், கிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத் தின் உறுதியையும்' பாராட்டுகிறார். கொலோ 2:5.

'ஒழுங்கு' என்பதற்கான கிரேக்க வார்த்தையானது, ஆரோன்-மெல்கி சேதேக்கின் ஆசாரிய ஒழுங்கைச் சுட்டிக்காட்ட புதிய ஏற்பாட்டில் வருகிறது. லூக் 1:8; எபி 7:11; எபி 5:6,10; 6:20; 7:11,17. ஆனால் பவுல், 1கொரி 14:40இலும் இங்கும், சபை ஒழுங்கைச் சுட்டிக்காட்ட இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார். சபை ஒழுங்கையும் அமைப்பையும் சபை நிறுவனம் சம்பந்தப்பட்டதும், இறை யியல் முக்கியமற்றதுமாக ஒன்றாகப் பார்க்கிற மனநிலை சிலரிடம் காணப்படு கிறது.

ஆனால் மூப்பர்களையும் உதவியாளர்களையும் தேர்வுசெய்வதிலும் ஆராதனையிலும், ஓர் ஒழுங்கு அவசியமென்று பவுல் வலியுறுத்துகிறார். 1கொரி 11; 1தீமோ 3; தீத்து 1. எனவே, சபை ஒழுங்கைப் பாதுகாப்பதில் பவுல் மிகுந்த அக்கறைகாட்டினார். அவ்வாறு செய்வதால், தேவனுடைய ஞானத்திற் கும் வேதாகமப் போதனைகளுக்கும் கீழ்ப்படிகிறோம்; அவற்றை அறிவிக்கி றோம்.

கொலோசெய விசுவாசிகளுக்கு பவுலின் கூட்டாளிகள் சரியான போத னைகளை அறிவித்ததால், இவர்கள் விசுவாசத்தில் 'உறுதிப்பட்டிருந்தார்கள்'. திடமான வேதாகம அடித்தளத்தின்மீது உறுதிப்பட்டிருந்ததால், அவர்களை அசைக்கமுடியாது; அதில் தொடர்ந்து நிலைத்திருக்கும்போது, கள்ளப்போத கர்களின் தவறான போதனைகளிலிருந்து பாதுகாக்கப்படமுடியும்.

---

**உங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் 'ஒழுங்கின்' அவசியத்தை எவ்வாறு அனுபவித்திருக் கிறீர்கள்?**

# கிறிஸ்துவுக்குள் வேர்கொண்டு, பெருகுதல்

கிறிஸ்தவ வாழ்வுக்கான தெளிவான சூத்திரங்களில் ஒன்றாக கொலோசெயரின் கருத்து உள்ளது: 'நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் நடந்துகொள்ளுங்கள்.' கொலோ 2:6. போதனைகளை அல்ல, ஒரு நபரை ஏற்றுக்கொள்வதால், இரட்சிப்பைப் பெறுகிறோம். இயேசுவை ஏற்றுக்கொள்ளும்போது, வேதாகமத்தின் அப்போஸ்தலர்கள் மூலமும், தீர்க்கதரிசிகள்மூலமும் கொடுக்கப்பட்ட அவரது சகல போதனைகளையும் ஏற்றுக்கொள்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது என்பது சுயத்திற்கு மரிப்பதாகும்; ஜீவனுள்ள கிறிஸ்துவிடம் சுயத்தை முற்றிலுமாக அர்ப்பணிப்பதாகும்.

ஜீவ வார்த்தையையும் (இயேசு), எழுதப்பட்ட வார்த்தையையும் (வேதாகமம்) பிரித்துப்பார்க்க முடியாது. அவை ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள். வேதாகமத்தினால்மட்டுமே நாம் இயேசுவை அறிந்துகொள்ள முடியும். 'அவருக்குள்' 'நடக்கிறோம்' அல்லது வாழ்கிறோம் என்றால், நம்முடைய எல்லாத் தீர்மானங்களிலும் நடவடிக்கைகளிலும் நம்மை வழிநடத்த அவரது வார்த்தையையும் ஆவியானவரையும் அனுமதிக்கிறோம் என்று அர்த்தம்.

கிறிஸ்தவர்களை செடிகளுடன் ஒப்பிட்டுப் பேசுகிற ஒரு பொதுவான வேதாகம உருவகத்தை கொலோ 2:7 இல் பவுல் பயன்படுத்துகிறார். கிறிஸ்துவை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்வதால் அவருக்குள் வேர்கொண்டு, அவரது வார்த்தையின்படி நம்வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகிறோம். அவ்வாறுதான் 'விசுவாசத்தில் உறுதிப்படுகிறோம்.'

**செடிகுறித்த உருவகம் விசுவாசிகளை அடையாளப்படுத்துவதை பின்வரும் வசனங்கள் எவ்வாறு விளக்குகின்றன? ஏசா 61:3; மத் 3:10; லூக் 8:11–15; 1கொரி 3:6.**

விசுவாசிகளுக்கு முன்னிருக்கிற இரண்டு வழிகளை பவுல் வேறுபடுத்துகிறார். ஒன்று, 'கர்த்தர் நாட்டின நீதியின் விருட்சங்களாக' நின்று, அவரையும் அவரது போதனைகளையும் பற்றிக்கொண்டு, கிறிஸ்துவுக்குள் பூரணமடைவது. ஏசா 61:3. மற்றொன்று, உண்மைபோலத் தோன்றினாலும், உயிரற்ற செயற்கை செடிகள்போல இருப்பது. இது வஞ்சகம். மனித தத்துவங்களையும் பாரம்பரியங்களையும் ஏற்றுக்கொள்வதால் நாம் 'கொள்ளைகொண்டு' போகப்படுகிறோம். கொலோ 2:8. கிறிஸ்து நம்மை விடுவித்திருந்தாலும்கூட, மீண்டும் பாவ அடிமைத்தனத்தில் சிக்க வாய்ப்பிருக்கிறது. கலா 5:1; அப் 15:10.

சுருக்கமாக, வேதாகமத்திற்கு புறம்பான போதனைகளை ஏற்றுக்கொள்வது கிறிஸ்துவைப் புறக்கணிப்பதாகும்; ஏனென்றால் பொய்ப்போதனைகளுக்குச் செவிகொடுப்பவர்கள் வேறு சுவிசேஷத்தையும், வேதாகமத்தின் அதிகாரத்திற்கு பதிலாக மனித அதிகாரங்களையும் ஏற்றுக்கொள்கிறார்கள். கலா 1:6-9. இது ஆதிகாலத் திருச்சபையில் காணப்பட்ட ஒரு ஆபத்து; இன்றும் அது ஆபத்தாகவே இருக்கிறது.

**கிறிஸ்துவைப் பெறுவதற்காக சுயத்திற்கு மரிப்பதில் உங்களுடைய அனுபவம் என்ன? அந்தச் செயல்முறை ஏன் தொடர்ந்து நடைபெறவேண்டும்?**

# சிலுவையில் ஆணியடிக்கப்பட்டது

**எந்தப் பிரச்சினைகளை எதிர்த்து கொலோ 2:11-15 இல் பவுல் போராடுகிறார்?**

கட்டளைகளுக்கு எதிராக, ஓய்வுநாளைக் கைக்கொள்வதற்கு எதிராக இந்த வசனங்கள், குறிப்பாக கொலோ 2:14ஆம் வசனம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த வசனங்களுக்கு இரண்டு விளக்கங்களை செவந்த்-டே அட்வென்டிஸ்டுகள் சொல்கிறார்கள். முதலாவது, சிலுவையில் அறையப்பட்ட 'கையெழுத்து' என்பது, இயேசு சிலுவையில் தொங்கியபோது அவருக்கு மேலாக பிலாத்து எழுதிவைத்த குற்றச்சாட்டு போன்ற நமக்கு 'எதிரிடையான' குற்றச்சாட்டாகும், அது சிலுவையில் அறையப்பட்டது. மத் 27:37; யோவான் 19:19,20. இரண்டாவது, மோசே எழுதிவைத்த சடங்காச்சார பிரமாணம் சிலுவையில் அறையப்பட்டது. உபா 31:24-26.

அந்த வசனம், சடங்காச்சார பிரமாணம்பற்றிப் பேசுவதை ஒட்டுமொத்தப் பின்னணியிலிருந்து அறியலாம். 'கையால் செய்யப்படாத விருத்தசேதனம்' என்று 'இருதயத்தில்' செய்யப்படுகிற விருத்தசேதனத்தை பவுல் குறிப்பிடுகிறார். கொலோ 2:11; ரோமர் 2:28,29; உபா 30:16. இது மாம்ச விருத்தசேதனத்திற்கு முற்றிலும் எதிரானது; மாம்ச விருத்தசேதனம் சடங்காச்சார பிரமாணம் சொல்கிற விதிகளில் ஒன்று. லேவி 12:3; யாத் 12:48.

'மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்து', தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்கும்போது, இந்த உள்ளான மாற்றம் உண்டாவதாக பவுல் கூறுகிறார். நாம் கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதிலும் பங்கெடுப்பதின் அடையாளமாக இந்த ஞானஸ்நானத்தை எடுக்கிறோம். கொலோ 2:11,12. 'பாவங்களினால் மரித்தவர்களாயிருந்து', பின்னர் அக்கிரமங்களெல்லாவற்றையும் நமக்கு மன்னித்த கிறிஸ்துவுடன் 'உயிர்ப்பிக்கப்பட்டதோடு' இந்த மனமாற்ற அனுபவம் ஒப்பிடப்படுகிறது. கொலோ 2:13.

கொலோ 2:14இல் வருகிற 'கட்டளைகள்' என்பது, லௌகீக அல்லது சபை சார்ந்த சட்டத்திட்டங்களைக் குறிக்கிறது. லூக் 2:1; அப் 17:7; 16:4. பவுல் எழுத்துகளில் இந்த வார்த்தை வேறு ஒரே ஒரு இடத்தில் வருகிறது; அங்கு, யூதர்களுக்கும் புறஜாதியாருக்கும் பிரிவினை சுவராக நின்ற சடங்காச்சாரப் பிரமாணத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எபே 2:14,15.

பாவ மன்னிப்பையும், உள்ளான மனமாற்றத்தின் அடையாளமான ஞானஸ்நானத்தையும்பற்றி பவுல் ஏற்கனவே பேசிவிட்டதால், அதே கருத்தை மீண்டும் வேதாகமத்தில் வேறு எங்கும் பயன்படுத்தப்படாத மற்றொரு உருவகத்தைப் பயன்படுத்தி பவுல் பேச வாய்ப்பில்லை. மாறாக, எபேசியரில் தான் வலியுறுத்தின கருத்தையே இங்கு வலியுறுத்துகிறார். அதாவது, கொலோசெயிலிருந்த புறஜாதியாரான விசுவாசிகளிடம், விருத்தசேதனம் உட்பட சடங்காச்சாரப் பிரமாணத்தையோ, சுத்திகரிப்பு பிரமாணத்தையோ கைக்கொள்வதுபற்றிக் கவலைப்படவேண்டாமென பவுல் வலியுறுத்துகிறார்.

பத்துக்கற்பனைகள் சிலுவையில் அறையப்பட்டதாக பவுல் சொல்லவில்லை; பத்துக்கற்பனைகளை மீறுவதுதான் பாவமென மற்ற இடங்களில் வலியுறுத்துகிறார். ரோமர் 7:7.

# நிழலா, பொருளா?

**கொலோ 2:16-19இல் பவுல் வலியுறுத்துகிற யூத-கிறிஸ்தவ நடைமுறை என்ன?**

---

பவுல் இங்கு பேசுகிற பிரச்சினைகள் என்னவென்பது பற்றி வேதஅறிஞர்கள் மத்தியில் இன்றுவரை ஒருமித்த கருத்து இல்லை. ஆனால் புறஜாதியார் அதிகமிருந்த அந்தச்சபையில், யூத-கிறிஸ்தவ கருத்துவேறுபாடு நிலவியிருக்க வேண்டும் என்பது புரிகிறது. கொலோ 2:13. அதாவது, விசுவாசிகள் கடைப்பிடிக்க அவசியமில்லாதவற்றைக் கடைப்பிடிக்குமாறு யூத விசுவாசிகள் கட்டாயப்படுத்தியிருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்களாக மாறிய யூதர்களில் சிலர் சில யூத நடைமுறைகளை தொடர்ந்து கடைப்பிடித்தார்கள். அவற்றை கொலோ 2:16 பட்டியலிடுகிறது. கொலோ 2:19 உம் அதேபோலப் பட்டியலிடுகிறது. மதத்தலைவர்களின் போலித் தாழ்மையை இயேசுதாமே கண்டித்திருக்கிறார். மத் 6:1,5,7,16. சில யூத தொழுகை முறைகளில் தூதர்கள் முக்கியப்படுத்தப்பட்டதை கும்ரான் புத்தகச்சுருள்களிலிருந்து அறியமுடிகிறது. எனவே, மற்ற இடங்களில் தான் எதிர்கொண்ட அதே பிரச்சினைகளைத்தாம் கொலோசெயேவிலும் பவுல் எதிர்கொண்டார்.

கொலோ 2:16ஆம் வசனம் அதிகம் தவறாகப் புரிந்துகொள்ளப்படுவதால், அதை விரிவாகப் பார்க்கவேண்டியது முக்கியம். பின்வரும் கருத்துகளைக் கவனியுங்கள்:

'ஆகையால்' என்றால், இதுவரை பவுல் சொன்னதின் நிறைவாக என்று அர்த்தம். முன்பு, மாம்சரீதியான விருத்தசேதனம் அவசியமில்லை என்றும், இருதயத்தில் உண்டாகிற மெய்யான மாற்றமே முக்கியமென்றும் கூறினார். கொலோ 2:11-15.

'போஜனம் பானம்' என்பது இஸ்ரவேலர்கள் தேவாலயத்திற்குக் கொண்டு வந்த போஜன பலிகளையுமி, பானபலிகளையும் குறிக்கிறது.

கொலோ 2:16இல், 'பண்டிகைகள், அமாவாசை' (சமகால மொழிபெயர்ப்பு) என்பது ஓசியா 2:11ஐ ஞாபகப்படுத்துகிறது; அங்கும் இதேபோன்ற சடங்காச்சார நாட்கள் குறிப்பிடப்படுகின்றன; அதில் சடங்காச்சார ஓய்வு நாட்களும் அடங்கும். லேவி 23:11,24,32.

இந்த வசனத்தைப் புரிந்துகொள்ள பவுலின் விளக்கம்தானே முக்கியமாக இருக்கிறது: அதாவது, இவை 'வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது.' 1கொரி 5:7; 15:23. மாறாக, ஏழாம் நாள் ஓய்வுநாளானது, பாவம் நுழைவதற்குமுன்னரே, ஆசரிப்புக்கூடார சடங்காச்சார பலிகள் நியமிக்கப்படும் முன்னரே ஏதேனில் ஏற்படுத்தப்பட்டது; ஆகவே சிலுவைக்குப் பிறகு ஒழிக்கப்படவேண்டிய நிழலில் இந்த ஓய்வுநாள் வராது.

---

**ஏழாம் நாள் ஓய்வுநாள்பற்றி இந்த வசனம் பேசவில்லைதான்; ஆனாலும் அதைத்தான் பேசுவதாகச் சொல்கிறவர்களை நாம் நியாயந்தீர்க்கக்கூடாது; மற்றவர்களை நாம் நியாயந்தீர்க்கக்கூடாது என்று பவுல் சொல்லியிருக்கிறாரே!**

# மனுஷருடைய கற்பனைகள்

**கொலோ 2ஆம் அதிகாரத்தில் விவாதிக்கப்படுகிற விஷயங்களின் அடிப்படையில் 20-23ம் வசனங்களில் பவுல் சொல்லும் அறிவுரைகளை எவ்வாறு புரிந்து கொள்ளலாம்?**

யூதச் சடங்காச்சாரங்களில் சிலர் அக்கறைகாட்டுவதை ‘உலகத்தின் அடிப் படைக் கொள்கைகள்’ மீதான அக்கறையென கலாத்தியர் நிருபத்தில் சொல்வது போல, இங்கும் பவுல் சொல்கிறார். கலா 4:3,9; கொலோ 2:8,20. அதாவது, பூலோக தேவாலயத்தைப்போல இந்தச் சடங்காச்சாரங்களும் பூமிக்குரியவை; நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது. சடங்காச்சாரப் பிர மாணம் எனும் பாரத்தை நாம் சுமக்கவேண்டியதில்லை; ஏனென்றால், இப் போது நாம் கிறிஸ்துவில் அனுபவிக்கிற நிஜத்தைத்தான் அது நிழலாகக் காட் டியது. அதை தேவன் கொடுத்திருந்தாலும்கூட, இந்தக் கட்டளைகள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிவிட்டதால், இனி அவசியமில்லை.

இந்தச் சட்டத்திட்டங்கள் அனைத்தும் சிலுவையில் ஒழிக்கப்பட்டது; ஒரு தெய்வீக கரம் தேவாலய திரைச்சீலையை இரண்டாகக் கிழித்த நிகழ்வு இதைச் சுட்டிக்காட்டுகிறது. யூத-கிறிஸ்தவர்கள் உட்பட கிறிஸ்தவர்கள் யாரும் இந்தச் சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டவர்கள் அல்ல. மத் 27:51; தானி 9:27. அவற்றை அனுசரிப்பது, கிறிஸ்துவுக்குள் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ள புதிய உலகை மறந்து, ஒழிந்துபோகிற இந்த உலகத்துடன் நமக்குத் தொடர்பை உண்டாக்குவதாகும்.

உண்மையில், ‘நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும்’ வருவதற்காக காத்திருக்கிறோமே தவிர, இந்தப் பழைய உலகம் புதுப்பிக்கப்பட நாம் காத்திருக்கவில்லை. 2பேதுரு 3:13.

பரிசேயர்களும் வேதபாரகர்களும்தான் மோசேயின் சட்டத்திட்டங் களுடன் கூடுதலாக மனித சட்டங்களைக் கூட்டினார்கள். மாற்கு 7:1-13. ஆனால், பழைய ஏற்பாட்டு சடங்காச்சாரச்சட்டங்களை கிறிஸ்து நிறைவேற்றிவிட்டதால், அவற்றை தேவன் விதித்துள்ள சட்டங்களாக அல்ல, மனிதர்கள் சுமத்தியுள்ள கடன்களாகத்தான் பார்க்கமுடியும். உண்மையில், அவை விசுவாசத்தை ஊக்கு விப்பதற்குப் பதிலாக, விசுவாசத்திற்குப் பாரமாக இருந்தன. அவற்றைக் கடைப் பிடிக்காத மற்றவர்களைவிட தாங்கள் மேலானவர்கள் என்கிற எண்ணமானது கடைப்பிடித்தவர்களிடம் இருந்தது. அதுவே கேடுதான். அதைவிட, அதில் நம் இரட்சிப்புக்கான புண்ணியம் இருக்கிறதென்கிற நயவஞ்சக எண்ணமும் உண் டாகலாம்; அது மிகவும் ஆபத்தானது.

வேத வசனங்களுக்கான அர்த்தத்தை பரிசுத்த ஆவியானவர்தாம் விசு வாசிகளுக்கு விளக்கவேண்டும்; ஆனால் வேதவல்லுனர்கள், மதரீதியான விளக்கங்களைக் கொடுத்து, அந்தச் சிலாக்கியத்தைப் பறிக்கிறார்கள். பவுலும் மற்ற வேதாகம எழுத்தாளர்களும் போதித்த வேதாகம சத்தியத்தின் ஊற்று கிறிஸ்துவே.

---

**கிறிஸ்து நமக்காகவும், நமக்கு வெளியேயும், நம்முடைய இடத்திலும், நம்மிலும் செய்வதுதான் நம் இரட்சிப்புகான ஒரே அடித்தளம் என்பதில் நாம் எவ்வாறு உறுதியாக இருக்கலாம்?**

# மேலும் படிக்க:

'அப்போஸ்தலர்களுடைய நாட்களில் பாரம்பரியத்தாலும் தத்துவத்தாலும் வேதாகமத்தின் மீதான விசுவாசத்தை மனிதர்கள் அழிக்க முயன்றார்கள். அதுபோல, இன்றைய நாட்களில், மனதிற்கினிய உயர்திறனாய்வுகள், பரிணாமக்கொள்கை, ஆவிமார்க்கம், பிரம்மஞானம், அனைத்திறைக் கொள்கை ஆகியவற்றின் மூலம், நீதியின் சத்துருவானவன் ஆத்துமாக்களை தடைசெய்யப்பட்ட பாதைகளில் வழிநடத்த முயல்கிறான். ஊகநம்பிக்கைகளை ஊக்குவிக்கிற வழிமுறைகளில் அநேகர் கவனம்செலுத்தி, தவறான புரிதலுக்கும் குழப்பத்திற்கும் ஆளாவதால், வேதாகமம் அவர்களுக்கு எண்ணெய் இல்லாத விளக்குபோல இருக்கிறது. பகுப்பாய்வு, ஊகம், மறுதிருத்தம் உள்ளிட்ட உயர்திறனாய்வு பணியானது 'வேதாகமம் ஒரு தெய்வீக வெளிப்பாடு' என்கிற விசுவாசத்தை அழிக்கிறது. மனித வாழ்வைக் கட்டுப்படுத்தவும், உயர்த்தவும், ஊக்குவிக்கவும் தேவ வார்த்தைக்கு உள்ள வல்லமையைக் களவாடுகிறது. 'ஆசைதான் மேலான சட்டம், இஷ்டப்படி நடப்பதற்கான உரிமம்தான் சுதந்தரம், மனிதன் தனக்குமட்டுமேபொறுப்பாளி' என ஆவிமார்க்கம் அநேகருக்குப்போதிக்கிறது.

'கொலோசெய விசுவாசிகள் எதிர்கொண்ட அதே நயவஞ்சகமான வார்த்தைகளை இன்றைய விசுவாசிகளும் எதிர்கொள்வார்கள். வேதவாக்கியங்களுக்கு ஆவிமார்க்க விளக்கங்கள் கொடுக்கப்பட்டாலும், அவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடாது. வேதவசனங்களின் நித்திய சத்தியங்களை உறுதிப்படுத்துகிற வகையில் அனைவரும் கேட்கும்படி பேசவேண்டும். கிறிஸ்துவின்மீதே தன் கண்களை வைத்து, சரியான பாதையில் விலகாமல் முன்னேறவேண்டும், அவரது போதனைகளுக்கு புறம்பான கருத்துகளை புறம்பே தள்ளவேண்டும். தேவ சத்தியமே அவரது சிந்தனையின், தியானத்தின் கருத்தாக இருக்கவேண்டும். தேவன் தன்னிடம் நேரடியாகப் பேசுகிற சத்தமாக வேதாகமத்தைக் கருதவேண்டும். அவ்வாறு தெய்வீக ஞானத்தை கண்டுகொள்ளலாம்.'

---

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *கிறிஸ்துவுக்குள் 'தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் வாசமாயிருக்கிறது.' அவரே 'சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவர்.' இவற்றின் அர்த்தம் என்ன? கொலோ **2:9,10;** யோவான் **1:1;** எபி **1:3;** 1பேதுரு **3:22.***

2. *ஏழாம் நாள் ஓய்வுநாளுக்கு எதிராக வாதிட, சிலர் கொலோ **2:14-16** வசனங்களைப் பயன்படுத்துகிறார்கள். நான்காம் கற்பனை இனி அவசியமில்லை என்று வாதிட இந்த வசனங்களைப் பயன்படுத்தினால், என்ன பிரச்சினைகள் உருவாகும் என்று இந்த வாரம் பார்த்தோம்; அதுதவிர, வேறு என்ன பிரச்சினைகள் உருவாகலாம்?*

3. *நாம் சடங்காச்சாரப் பிரமாணத்தையும் கைக்கொள்ள வேண்டும் என்று வாதிடுகிறவர்களுக்கு உங்களுடைய பதில் என்ன? அவற்றைக் கைக்கொள்வதால் சில ஆவிக்குரிய அல்லது இறையியல் ஆசீர்வாதங்கள் கிடைக்கலாம். ஆனால் அவற்றைக் கைக்கொள்ள வற்புறுத்தும்போது, என்ன பிரச்சினைகள் உருவாகின்றன?*

4. *நம்மிடம் 'தேவன் நேரடியாகப் பேசுகிற சத்தமாக வேதாகமத்தைப் பார்க்க வேண்டும்' என்று எலன் ஒய்ட் சொல்கிறார். வேதாகமத்தில் நமக்கு சௌகரியமாக இல்லாத விஷயங்கள் உட்பட, வேதாகமத்தின் ஒட்டுமொத்த அதிகாரத்திலும் தெய்வீக ஏவுதலிலும் நம் விசுவாசத்தைப் பெலவீனப்படுத்துகிற எதற்கும், எவருக்கும் எதிராக நம்மை நாம் ஜாக்கிரதையுடன் பாதுகாக்கவேண்டியது ஏன் அவசியம்?*

# சிறை அல்லது மரணத்தண்டனை

ஆறுமாதங்கள் பிரச்சினையில்லாமல் ஓய்வுநாளில் ஆலயத்திற்குச் சென்றார் ரெனே, அப்போது அவருடைய முதலாளி அழைத்தார். "நம்முடைய அடுத்தக் கணக்கர் உங்களைப் போல நன்றாக வேலைசெய்வதில்லை. எனக்கு ஒரு உதவிசெய்ய முடியுமா? சனிக்கிழமையில் குறைந்தப்பட்சம் ஒரு மணி நேரம் வேலைசெய்ய முடியுமா?" என்று கேட்டார்.

உடனே, 'தேவனே, சனிக்கிழையில் ஆலயத்திற்குச் செல்ல நீர் உதவினால், நான் மரிக்கும்மட்டும் ஓய்வுநாளை பரிசுத்தமாகக் கைக்கொள்வேன்' என்று இரண்டு வருடமாக தான் ஜெபித்து வந்தது ரெனேவுக்கு நினைவுக்கு வந்தது.

"என்னால் முடியாது" என்று ரெனே சொன்னார். "இல்லை, நீங்கள் செய்துதான் ஆக வேண்டும். ஒரு மணி நேரம் போதும். எத்தனை மணிக்கு ஆலயத்திற்குள் இருப்பீர்கள்?" "எட்டிலிருந்து பன்னிரெண்டு வரை." "அப்படியானால் மதியம் ஒரு மணிக்கு வாருங்கள்." "ஆனால் அன்று சனிக்கிழமை" என்று ரெனே சொன்னார். "அது பரவாயில்லை" என்று முதலாளி சொன்னார். "ஆனால் என்னால் முடியாது" என்று ரெனே சொன்னார்.

ரெனேவின் முதலாளி அவரை முறைத்துப்பார்த்தார். "நீங்களே முடிவுசெய்யுங்கள்" என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார். ஆறு வாரங்கள் கழித்து, இலேசாக அச்சுறுத்துகிற வகையில் முதலாளி கெடு விதித்தார்.

"உங்களுடைய இறுதி முடிவு என்ன? வருகிற சனிக் கிழமையில் நீங்கள் வேலைசெய்ய வேண்டும். இல்லையென்றால், நான் என்ன செய்வே னென்று எனக்கே தெரியாது" என்று சொன்னார்.

கிறிஸ்தவத்திற்கு எதிரான ஒரு நாட்டில் ரெனே வேலைசெய்தார். அங்கு மதசுந்திரம் கிடையாது. விசுவாசத்தின் நிமித்தம் மக்கள் சிறையில் அடைக்கப்பட்டதையும் அல்லது கொல்லப்பட்டதையும் கேள்விப்பட்டிருந்தார். வீட்டிற்கு வந்ததும், "ஆண்டவரே, ஏராளமான பிரச்சினைகளில் சிக்கிக்கொண்டேன். இங்கேயே நான் செத்துப்போக விரும்புகிறீரா?" என்று ஜெபித்தார்.

மூன்று நாட்கள் கழித்து, ஓய்வுநாளில் ஆலயத்திற்குச் சென்றார். அவரது அலுவலகம் அமைந்திருந்த அதே அடுக்குமாடி குடியிருப்பில்தான் வசித்து வந்தார்.

அவர் கட்டிடத்தைவிட்டுக் கிளம்பும்போது, அவருடன் வேலைசெய்கிறவர், "இன்று வேலைக்கு வரவில்லையா?" என்று கேட்டார். "நான் வரவில்லை" என்று ரெனே சொன்னார்.

அலுவலக அலைபேசி ரெனேவிடம் இருந்தது; அதை அணைத்துப் போட்டார். ஆலயத்திற்குச் செல்லும்போது, அலைபேசியை வைத்து தன்னை அடையாளம்காண அவர் விரும்பவில்லை.

அன்று மதியம், அவருடைய முதலாளி எதிர்பாராமல் அலுவலகத்திற்கு வந்தார். அலைபேசியில் தொடர்புகொள்ள மீண்டும் மீண்டும் முயன்றும் தொடர்பு கொள்ள முயன்றார், முடியவில்லை.



பிறகு, அந்த உடன்வேலையாள் ரெனேவிடம், "முதலாளி பிசாசுபோல மாறிவிட்டார். உங்களைத் தின்றுவிடவேண்டும்போல அவருடைய கண் கள் சிவந்துவிட்டன. உங்களை அவர் சிறைச்சாலைக்கு அனுப்பலாம். எங் களையும் சிக்கலில் மாட்டிவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்" என்றார்.